FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணை பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 4th Term Examination - 2022

| | | |
|---|---|---|
| நாடகமும் அரங்கியலும் - I<br>Drama & Theater - I | Three Hours<br>Gr. 13 (2022) | 58 T I |


## பகுதி – I

**இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும், சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக**

01) 'தான் பெறுகின்ற அனுபவத்தை பிறருக்கும் அனுபவிக்க வைப்பதே கலை' எனக் குறிப்பிட்டவர்.
(1) குரேசோ (2) ஹெகல் (3) அரிஸ்ரோட்டில்
(4) வில்லியம் வேட்ஸ் வேந்த் (5) எரிக் நியூட்டன் (…..)

02) 'அழகை கண்டு பிடிப்பதும் அதனை வெளிப்படுத்துவதுமே கலை' எனக் கூறியவர்?
(1) அரவிந்தர் (2) தாகூர் (3) பரதர்
(4) மாசேதுங் (5) எறிக்நியூட்டன் (…..)

03) 'நாடகம் என்பது உலக இயல்பை போலச் செய்தல் ஆகும்' எனும் கருத்தைக் கூறியவர்?
(1) பரதமுனிவந் (2) ரூசோ (3) அரிஸ்ரோட்டில்
(4) பேர்ணாட்ஷா (5) அலடைஸ்நிக்கொல் (…..)

04) பின்வருவனவற்றில் 'மனவெளியில் கண்டு' கற்பனை செய்து இரசிக்கும் கலை வடிவம்?
(1) நடனம் (2) இலக்கியம் 3) இசை
(4) நாடகம் (5) சினிமா (…..)

05) 'தூய உள்ளுனந்வின் வெளிப்பாடே கலை' எனக் கூறியவர்?
(1) குரேசு (2) அரிஸ்ரோட்டில் (3) எரிக்நியூட்டன்
(4) ஹகல் (5) பல்ஸ்ராய் (…..)

06) பார்ப்போரின் பதிற்குறி தாக்கம் செலுத்தும் கலைகளில் ஒன்று
(1) ஓவியம் (2) கட்டிடம் (3) நாடகம்
(4) சிற்பம் (5) இலக்கியம் (…..)

07) உடல் அசைவுகள், சைகைகள், மெய்நிலைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் அபிநயம்
(1) அஹார்யம் (2) ஆங்கிகம் (3) ஸாத்விகம்
(4) வார்ச்சிகம் (5) பிராந்தியாயம் (…..)

08) ‘ஊமம்’ தோற்றம் பெற்ற நாடு

(1) கிரேக்கம் (2) இங்கிலாந்து (3) இந்தியா

(4) உரோம் (5) இத்தாலி (…..)

09) இலக்கியத்துடன் தொடர்புபடுகின்ற பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

அ) கதை சொல்லப்படும்

ஆ) பாத்திரங்கள் காணப்படும்

இ) கிளைக்கதைகள் காணப்படும்

ஈ) வார்த்தைகளால் வளர்த்துச் செல்லப்படும்

உ) வர்ணனைகள் விளக்கங்கள் காணப்படும் (…..)

10) ‘அரங்கு’ என்பதற்கு பொருத்தமற்ற கூற்று

(1) ஆற்றுகை நிகழும் இடம்

(2) ஆற்றுகைக்குரிய செயற்தொகுதி

(3) கல்லால் அமைக்கப்பெற்ற கட்டடம்

(4) ஆற்றுவோர் பார்ப்போர் இணையும் இடம்

(5) பார்த்தலுக்குரிய வெளியும் செயலும் (…..)

11) கிரேக்க ரஜடி நாடகங்களில் உரையாடலுக்குப் பயன்படுத்தப்பட்டவை?

(1) அகவஹ்பா (2) வெற்றுக்கவிதை (3) இயாம்பிக்கவிதை

(4) வசனகவிதை (5) வெண்பா (…..)

12) கிரேக்க அரங்கில் கொலை மரணம் போன்ற மேடையில் காட்டக்கூடாத சம்பவங்களை மேடையில் வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபாயம்

(1) கோறஸ் (2) அரங்கப்பொறிகள் (3) செய்தியாளன்

(4) காட்சித்திரைகள் (5) பாடல்கள் (…..)

13) பின்வரும் நாடகங்களில், சோபோகினிளிஸின் நாடகம் அல்லாதது.

(1) அஜெக்ஸ் (20 எலெக்ரா (3) அகமென்ன

(4) அன்ரிக்கனி (5) ஈடிப்பஸ் அற்கொலோனஸ் (…..)

14) கிரேக்கத்தில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய கதைகளை வைத்து நாடகம் ஆக்கியவர்

(1) ஈஸ்கலஸ் (2) சோபோகிளிஸ் (3) யூரிப்பிடிஸ்

(4) அரிஸ்ரோபென்ஸ் (5) மெனான்டர். (…..)

15) கிரேக்க ‘திறஜெடி’ தோன்றியது

(1) கோமுஸ் ஊர்வலத்தில் இருந்து (2) டித்ராம் பாடலில் இருந்து

(3) லிங்கப் பாடல்களில் இருந்து (4) குரவை பாடலில் இருந்து

(5) கிரேக்க புராணங்களிலிருந் (…..)

16) ‘மிருச்ச கடிகம்’ என்னும் வடமொழி நாடகத்தினை எழுகியவர்.

(1) சூத்ரகர் (2) காளிதாசர் (3) பாசர்
(4) அபிநவகுப்தர் (5) ஹர்சர் (…..)

17) ‘சமஸ்கிருத அரங்கில்’ நாடகம் நடைபெறும் போது “சூத்திரர்” என்னும் வம்சத்தினர் அமர்வதற்கு விதிக்கப்பட்ட இடம்

(1) தென்கிழக்கு மூலை (2) வடமேற்கு மூலை (3) வடகிழக்கு மூலை
(4) தென்மேற்கு மூலை (5) கிழக்கு மூலை (…..)

18) பரத முனிவர் கூறும் ‘ரச’ என்பதை அபிநவ குப்தந்

(1) கதாசிஸ் (2) யூஜின் (3) ரசவாதம்
(4) மெய்ப்பாடு (5) உள்ஆழம் (…..)

19) “தானயம்பல” எனும் அரங்க வெளியில் நிகழ்த்தப் பெறும் ஆற்றுகை வடிவம்

(1) சொக்கரி (2) கோலம் (3) நாடகம்
(4) நூர்த்தி (5) நட்டயக்கும் (…..)

20) தொல்காப்பியம் கூறுகின்ற ஆற்றுகை மையமாக இருப்பது

(1) ஆடுகளம் (2) கூத்தம்பலம் (3) பண்ணை
(4) அருமன்ற (5) கூத்தாட்டவை (…..)

21) கருத்தூன்றல், அவதான பயிற்சிகளிற்கு அழுத்தம் கொக்கும் அரங்க விளையாட்டு

(1) ஆடும் வீடும் (2) கோழிகோட்டான் (3) பழக்கலவை
(4) கரடியும் கிராம மக்களும்(5) நண்டு, இறால், மீன் (…..)

22) நாடக எழுத்துருவினை வியாக்கியானம் செய்யும் கலைஞன்

(1) நடிகன் (2) காட்சிவிதானிப்பாளன் (3) நெறியாளன்
(4) தயாரிப்பாளன் (5) நாடக ஆசிரியர் (…..)

23) ஆற்றுகை கலையாக ஏற்க முடியாதது.

(1) பலே (2) ஓபேறா (3) கூத்து
(4) ஓவியம் (5) இசை (…..)

24) துன்பம் நிறைந்த காட்சிகளை எடுத்துக் கூறும் நாடகம்

(1) மகிழ்நெறிநாடகம் (2) அவலச்சுவை நாடகம் (3) சற்ரயர் நாடகம்
(4) வீர நாடகம் (5) விகட நாடகம் (…..)

25) ஆசிரியர் விரும்புவதை பார்வையாளரிற்கு முழுமையாக வழங்கும் நபர்

(1) தயாரிப்பாளர் (2) நெறியாளன் (3) நடிகன்
(4) ஒளியமைப்பாளர் (5) மேடைமுகாமையாளர் (…..)


26) ‘காவிய அரங்கினை’ தோற்றுவித்தவர்.
(1) பெற்றோல்ட பிறக்ற் (2) பிற்றர் புறூக் (3) மேயஹோல்ட்
(4) குஹொட்டோவஸ்கி (5) எர்வின் பிஸ்காட்டந் (…..)

27) ‘நடிப்புச்’ செயற்பாட்டிற்க சடங்குக் கூறுகளை இணைந்த நாடக நெறியாளர்
(1) ஸ்ரனிஸ்வஸ்கி (2) மேயர் ஹோல்ட் (3) பெற்றோல்ட்மரக்ட்
(4) அகஸ்தோபோல் (5) குறொட்டோவஸ்கி (…..)

28) பின்வருவோரில் ‘ஸ்பானிய’ நாடக மரபில் தனது நாடகங்களால் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய நாடக ஆசிரியர்
(1) ஹில்லர் (2) லோப்போ டிவேக்கா (3) கத்தே
(4) அலெக்சாண்டர்டுமாஸ் (5) விக்டர்குகோ (…..)

29) றிச்சாட் செக்னர் தனது ‘சூழலியல் அரங்கில்’ பயன்படுத்திய சடங்கு
(1) சூரன்போர் (2) மகாபாரதம் (3) பாலித்தீவு மக்களின் சடங்கு
(4) பூர்சுவா மக்களின் சடங்கு (5) ராம்லீலா சடங்கு (…..)

30) இந்நாடக ஆசிரியர் முன்வைத்த அரங்க சிந்தனை



(1) அந்நியமாதல் அரங்கு
(2) வறுமை அரங்கு
(3) அபத்த அரங்கு
(4) காவிய அரங்கு
(5) குரூர அரங்கு (…..)

31) ஜப்பானில் நாடகத் தோற்றத்துக்கான சடங்கு என நம்பப்படுவது.
(1) டயோனீசியஸ் (2) ஈஸ்டர் சடங்கு (3) பாடுகளின் சடங்கு
(4) சம்போசா சடங்கு (5) தொவில் சடங்கு (…..)

32) “பீக்கிங் ஓப்ரோ” எந்த நாட்டுக்குரியது
(1) இத்தாலி (2) சீனா (3) ஜப்பான்
(4) பிரான்ஸ் (5) ஸ்பெயின் (…..)

33) “பலே” வடிவம் தோற்றம் பெற்ற நாடு
(1) இத்தாலி (2) பிரான்ஸ் (3) சீனா
(4) இந்தியா (5) பிரித்தானியா (…..)


34) உலகப்புகழ் பெற்ற அன்னத்தடாகம் (shan lake) என்னும் நாடகம் எவ்வகைமை சார்ந்தது?
(1) ஒப்பேரா (2) நூந்த்தி (3) பலே
(4) கதகளி (5) ரஜ்டி (…..)

35) ஜப்பானிய நோ அரங்கு ஒன்றின் அழகியல் திருப்தி எவ்வாறு அழைக்கப்பம்

(1) கதாசிஸ் (2) ரஸம் (3) சுவை


(4) யூஜின் (5) சமநிலை (…..)

- **36 – 40 வரையான வினாக்களுக்கு கீழே தரப்படும் படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை அளிக்குக.**


(அ)


(ஆ)


(இ)


(ஈ)


(உ)

36) கூத்து புத்தாக்க பணிகளில் தம்மை ஈடுபடுத்தியவர்

(1) அ, இ (2) இ, ஈ, (3) அ, ஆ

(4) அ, ஈ (5) அ, ஈ (…..)

37) சிறுவர் நாடக ஆசிரியர்களுள் கால ஒழுங்கின் முறையே

(1) அ, ஈ, (2) இ, ஈ, (3) ஈ, இ,

(4) ஆ, இ (5) ஆ, இ (…..)

38) யாழ்ப்பாணத்துப் பேச்சு மொழியை நாடகத்தில் முதலில் கையாண்டவர்.

(1) அ (2) ஆ (3) இ

(4) ஈ (5) உ (…..)

39) வாலிவதை, இராவணேசன் போன்ற கூத்துக்களை நூலுருவாக்கம் செய்தவர்.

(1) அ (2) ஆ (3) இ

(4) ஈ (5) உ (…..)

40) பொருளோ பொருள், அருமை நண்பன், மண்சுமந்த மேனியர் ஆகிய நாடகங்களை எழுதியோர் முறையே

(1) ஆ, இ, ஈ (2) ஈ, உ, அ (3) அ, ஈ, உ

(4) ஆ, உ, இ (5) இ, உ, அ (…..)

## பகுதி II

➢ **பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களையும், பிரிவு B இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.**

### உப பகுதி – A

01) 1. அரங்கிற்கும் பண்பாட்டிற்கும் இடையிலான தொடர்பை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)
2. அரங்க வெளி என்பதனால் கருதப்படுவது யாது? (5 புள்ளி)
3. 'தொழில் நுட்பம்' நாடகக் கலையின் மேம்பாட்டிற்கு உதவுமாற்றை விபரிக்குக. (5 புள்ளி)

02) 1. நாடகத்தில் நடிப்பின் முக்கியத்துவத்தினை விபரிக்கு.
2. ஆற்றுகைக் கலை என்பதை உதாரணம் தந்து விளக்குக.
3. நடிப்பு, ஆற்றுகை ஆகிய எண்க்கருக்களை ஒப்பிடுக.

(3 x 5 = 15 புள்ளி)

03) நடிகர் நின்று நடிக்கும் அரங்கவெளியை ஓர் அழகியல் வெளி என்பர். பின்வரும் அரங்கவெளிகளின் இயல்புகளை விளக்குக.
1. கூத்து நிகழ்த்தும் வட்டக்களரி அரங்கு
2. கிரேக்க திறந்த வெளி அரங்கு
3. ஐப்பானிய கபுகி அரங்கு

(3 x 5 = 15 புள்ளி)

### பகுதி - B

04) கிரேக்க திறஜெடி நாடகம் ஒன்றில் அரிஸ்ரோட்டில் கூறும் ஆறு அம்சங்களும் எத்தகைய இடத்தினைப் பெறுகின்றன என்பதை விளக்குக. (15 புள்ளி)

05) "சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலத்தில் நெறி முறைப்படுத்தப்பட்ட அரங்க மரபு ஒன்று தமிழ் நாட்டில் இருந்துள்ளது" இக்கூற்றினை உதாரணங்களுடன் விளக்குக. (5 புள்ளி)

06) பின்வருவனவற்றுள் மூன்றிற்கு சிறுகுறிப்ப எழுதுக.
1. ஜெர்சி குஹொட்டொவஸ்கி
2. சிகிச்சை அரங்கு
3. மனோரதிய வாதம்
4. சற்றயர்
5. கதாசிஸ்

(3 x 5 = 15 புள்ளி)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணை பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 4th Term Examination - 2022

FWC

நாடகமும் அரங்கியலும் - II
**Drama & Theater - II**

Three Hours

Gr. 13 (2022)

58 | T | II

### பகுதி – I

➢ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும், பொருத்தமானதுமான விடையை தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தினை அடைப்புக் குறியினுள் எழுதுக.**

01. கிரேக்க திறஜெடியின் கதைச் சூழ்வின் பிரதான அம்சம்.
(1) பின்னோக்கு 2) மாற்றமுடியாத விதி 3) கவலை
4) பாடல் 5) மகிழ்வழிப்பு (…….)

02. இராவணேசன் நாடகத்தில் "உந்தன் உதிரமையா உனக்கிது உதவாமல் போய்விடுமா" என்ற பாடலுக்குரிய பாத்திரம்.
(1) கும்பகர்ணன் 2) இந்திரஜித் 3) இலக்குவன்
4) சுக்கிரிவன் 5) அனுமான் (…….)

03. கோடை நாடகத்தில் நாடகத்தின் மீது விருப்புக் கொண்ட பாத்திரம்.
(1) கனேசு (2) முருகப்பு (3) காசி
(4) கமலி (5) செல்லம் (…….)

04. லியர் மன்னன் நாடகத்தில் வரும் "கோடிலியா" என்ற பாத்திரத்தின் பண்பாக கருதக் கூடியது
(1) பதவி ஆசை கொண்டவள்
(2) வெளித்தோற்றத்திற்கு நல்லவள்
(3) வெளித்தோற்றத்திற்கு அமைதியானவள்
(4) லியரை நேர் எதிரே புகழாதவள்
(5) சொத்துக்கு ஆசைப்பட்டவள் (…….)

05. ஒரு பாவை வீடு நாடகத்தில் வரும் "நில்ஸ் குடுறாக்ஸ்டட்" என்ற பாத்திரம்
(1) சட்டத்தரணி (2) வைத்தியர் (3) நியாயவாதி
(4) அதிகாரி (5) வாடிக்கையாளர் (…….)

06. பின்வருவனவற்றில் 'குருநான்சே' யினால் நிகழ்த்தப்படும் சிங்களச் சடங்கு
(1) தொவில் (2) ஹம்மடுவ (3) றட்டயக்கும
(4) சன்னியக்கும (5) கொஹெம்ப ஹங்காரிய (…….)

07. சிங்கள மக்களின் 'கோலம்' நாடகம் மரபில் பயன்படுத்தப்படும் "தானயம்பல்" என்ற அரங்க வெளியானது.

(1) சுற்றிவர பார்ப்போர் அமரும் அரங்க வெளி

(2) மூன்று பக்கமும் பார்ப்போர் அமரும் அரங்க வெளி

(3) ஒரு பக்கம் பார்ப்போரைக் கொண்ட அரங்க வெளி

(4) பல இடங்களிலும் ஆற்றுகை நடைபெறும் நகரும் வெளி

(5) உயர்த்தப்பட்ட படச்சட்ட அரங்க வெளி (.......)

08. சிங்கள மக்கள் மத்தியில் குழந்தைவரம் வேண்டியும், சுகப்பிரசவம் வேண்டியும் செய்யப்படுகின்ற நாடகப்பண்புடை 'சடங்கு'

(1) தொவில் (2) சன்னியக்கும (3) ரட்டயக்கும

(4) சொக்கரி (5) நூர்த்தி (.......)

09. சிங்கள யதார்த்தவாத நாடகங்களைச் சமூக யதார்த்தம் தேடும் கலை ஊடகமாக மாற்றியமைத்தவர்.

(1) தம்மஜாகொட (2) ஹென்றிஜயசேன (3) குணசேனகலப்பதி

(4) தயானந்த குணவர்த்தன (5) சுகதபால டி சில்வா (.......)

10. வெவ்வேறு நோய்களைக் குறிக்கும் வேடமுகங்களை அணிந்து ஆடப்படும் சிங்கள சடங்கு

1) கொஹமப ஹங்காரிய 2) தெவொல்மடுவ 3) சன்னியக்கும

4) கம்மடுவ 5) பஹன்மடுவ (.......)

11. மறைஞான நாடகங்கள் எனப்படுபவை.

(1) கிறிஸ்தவ மக்களின் ஒழுக்கப்பண்புகளைக் குறிப்பனவாகும்.

(2) இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு என்பவற்றைக் குறிப்பனவாகும்.

(3) புனிதர்களின் அற்புதங்களை உள்ளடக்கிய கதைகளைக் கூறுவனவாகும்.

(4) வணக்க முறையோடு தொடர்புடைய கதைகளைக் கூறுவனவாகும்.

(5) கிறிஸ்துவின் பாடுகளை விவரிப்பனவாகும். (.......)

12. கொப்பஸ் கிறிஸ்ரி விழாவில் பெருமளவில் மேடையேற்றப்பட்ட மத்திய கால நாடகம்.

1) அற்புத நாடகம் 2) மறைபொருள் நாடகம்

3) பொது வணக்க முறை நாடகம் 4) ஒழுக்கப்பண்பு நாடகம்

5) பாணர் இசை நிகழ்வு (.......)

13. ஐரோப்பிய அரங்க வரலாற்றில் மத்திய கால நாடகங்கள் நிகழ்த்தப்பட்ட ஒழுங்கு

(1) பீடம், தேவாலய வாயில், ஊந்தி, பூத் அரங்கு

(2) பூத் அரங்கு, தேவாலய வாயில், பீடம், ஊந்தி

(3) ஊந்தி, திருச்சபை, பட்டணச் சதுக்க அரங்கு, பீடம்

(4) பீடம், ஊந்தி, தெருவெளி, தேவாலய வாயில்

(5) திருச்சபை, பீடம், ஊந்தி, தெருவெளி (.......)

14. மத்திய காலத்தைச் சேர்ந்த "ஒவ்வொரு மனிதரும்" (Every man) நாடகம் எத்தகையது.

(1) திருமறை (2) அற்புதம் (3) ஒழுக்கப்பண்பு

(4) பொது வணக்க முறை (5) வீரம் (.......)

15. மரத்திலான பொம்மைகளைக் கொண்டு செய்யப்ப'டும் கத்தோலிக்க சமயச் சடங்கு வடிவம்

(1) கோலம் (2) உடக்குப் பாஸ் (3) திருப்பாடுகளின் சாட்சி

(4) சூரன் போர் (5) யமசங்காரம் (.......)

16. தொல்காப்பியம் எழுதப்பட்ட காலத்தில் ‘ஆடல் வல்லாளர்’ ஆடல் நிகழ்த்திய களம் எப்பெயரில் வழங்கி வந்தது?
(1) கடத்தரங்கு (2) களரி (3) கூத்தாட்டவைக்குழாம்
(4) அம்பலம் (5) பண்ணை (…….)

17. சங்ககால கூத்தர் குழாயில் இடம்பெற்ற ‘பெண் கூத்தர்’
(1) சதுரி (2) கோடியர் (3) விறலியர்
(4) வயிரியர் (5) பாணர் (…….)

18. பின்வரும் ‘கூத்துக்களில்’ சோழர் காலத்தில் நிகழ்த்தப்படாத கூத்து
(1) வரிக்கூத்து (2) ஆரியக்கூத்து (3) சாக்கைக்கூத்து
(4) தமிழ்க்கூத்து (5) சாந்திக்கூத்து (…….)

19. சிலப்பதிகாரத்தில் மாதவி நிகழ்த்திய ஆடல்களில் இடம்பெறாத கடவுளர்கள்
(1) சிவன், முருகன் (2) சிவன், விஸ்ணு (3) காமன், இந்திரன்
(4) கொற்றவை, மாயோன் (5) திரௌபதி, கண்ணகி (…….)

20. தமிழ் நாட்டில் ‘களவேள்வி’ ‘வெறியாட்டு’ போன்ற சடங்காற்றுகைகள் இடம்பெற்ற காலம்
(1) கி.பி 600க்கு முன் (2) கி.பி 600 – 1300 (3) கி.பி 1300 – 1800
(4) கி.பி 1800 - 1947 (5) கி.பி 1947க்கு பின் (…….)

21. பின்வரும் கூத்துக்களில் யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து மரபு சாராத கூத்து.
(1) எஸ்தாக்கியார் நாடகம் (2) தர்மபுத்திரன் நாடகம் (3) சங்கிலியன் நாடகம்
(4) தேவசகாயம் பிள்ளை நாடகம் (5) ஞான சௌந்தரி நாடகம் (…….)

22. ‘கட்டியக்காரன்’ என்னும் பாத்திரம் முதன் முதலாக அறிமுகம் பெற்ற வடிவம்.
(1) ‘கூத்து’ வடிவம் (2) ‘இசைநாடக’ வடிவம் (3) ‘பள்ளு நாடக’ வடிவம்
(4) ‘கதகளி’ வடிவம் (5) ‘குறவஞ்சி’ வடிவம் (…….)

23. இளவேனிற் காலத்தில் நிகழ்த்தப்படும் மலையகக் கூத்து.
(1) காமன் கூத்து (2) பொன்னர்,சங்கர் (3) அர்ச்சணன் தபசு
(4) கோவலன் கூத்து (5) மகிடிக் கூத்து (…….)

24. அதிகளவிலான காதல் சுவையினைக் கொண்டிருக்கும் வடிவம்.
(1) வடமோடி (2) வடபாங்கு (3) தென்மோடி
(4) தென்பாங்கு (5) வாசாப்பு (…….)

25. கிறிஸ்தவ கூத்துக்களில் வருகின்ற ‘புலசந்தோர்’ எனும் பாத்திரம்.
(1) கதை சொல்லும் பாத்திரம்
(2) பிற்பாட்டுப் பாடும் பாத்திரம்
(3) நாடகத்தில் வரும் புனிதர் பாத்திரம்
(4) புலவர் பாத்திரம்
(5) நகைச்சுவைப் பாத்திரம் (…….)

26. ஈழத்தில் இருந்து தமிழ் நாட்டுக்குச் சென்று நவீன நாடகத்துறையில், பேசப்படும் கலைஞராக திகழ்ந்தவர்.
1) குழந்தை ம. சண்முகலிங்கம் 2) கிருஷ்ணான்வர்
3) அ. தாசீசியஸ் 4) க. பாலேந்திரா
5) இளைய பத்மநாதன் (…….)

27. ஈழத்தில் மேடையேற்றப்பட்ட பின்வரும் நாடகங்களில் 'வர்க்க முரண்பாட்டோடு' தொடர்புபாடாத நாடகம்.
1) சங்காரம் 2) கந்தன் கருணை 3) கடூழியம்
4) புதிய தொரு வீடு 5) மானிடமென்பது புல்லோ (…….)

28. "இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் நாடக அரங்கு" எனும் நூலை எழுதியவர்.
(1) காரை. செ. சுந்தரம்பிள்ளை (2) சி. மௌன குரு (3) க. சொக்கலிங்கம்
(4) இ. சிவானந்தன் (5) கா. சிவத்தம்பி (…….)

29. இலங்கையில் முதன்முதலில் தமிழ் நாடகங்கள் மேடையேற்றப்பட்ட பல்கலைக்கழகம்.
(1) யாழ்ப்பாண பல்கலைக்கழகம் (2) கட்டுப்பெத்த வளாகம்
(3) கொழும்பு பல்கலைக்கழகம் (4) பேராதனை பல்கலைக்கழகம்
(5) மட்டக்களப்பு பல்கலைக்கழகம் (…….)

30. ஈழத்தின் முதல் தெருவெளி நாடகமாகக் கருதப்படுவது.
1) திருவிழா 2) மண்சுமந்த மேனியர் 3) மாயமான்
4) விடுதலைக்காளி 5) கசிப்பு (…….)



31. நாடகம் ஒன்றில் பயன்படும் ஆடை அணிகள் எவ்வாறு இருத்தல் வேண்டும்.
(1) அலங்காரத்திற்கு ஏற்றதாக அமைதல் வேண்டும்.
(2) நாடகம் மேடையேறும் காலத்திற்கு ஏற்றதாக அமைதல் வேண்டும்.
(3) நாடக மோடிக்கு ஏற்றதாக அமைதல் வேண்டும்.
(4) பாத்திரத்தின் கவர்ச்சியை அதிகரிக்க வேண்டும்.
(5) பகட்டானதாகவும் ஆடம்பரமானதாகவும் அமைதல் வேண்டும். (……)

32. நாடக ஆசிரியரின் உணர்வினைப் பார்ப்போருடன் தொடர்புபடுத்துவதில் பிரதானமானவர்.
(1) நெறியாளர் (2) தயாரிப்பாளர் (3) நடிகர்
(4) இசையமைப்பாளர் (5) ஒளிவிதானிப்பாளர் (…….)

33. நாடகத் தயாரிப்பாளரின் மிகப் பிரதான பணி.
(1) ஒத்திசைகளை மேற்கொள்ளுதல் ஆகும்.
(2) நடிகருக்குப் பயிற்சிகளை வழங்குதல் ஆகும்.
(3) நடிகருக்குரிய பாத்திரங்களை வழங்குதல் ஆகும்.
(4) நாடகத்திற்கு வேண்டிய நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகும்.
(5) மேடை முகாமைத்துவத்தினை மேற்கொள்ளல் ஆகும். (…….)



34. ஒளியின் வர்ணச்சக்கரம் ஒன்றின் மூலவர்ணங்கள்
(1) சிவப்பு, நீலம், பச்சை (2) மஞ்சள், நீலம், ஊதா
(3) சிவப்பு, நீலம், மஞ்சள் (4) மஞ்சள், நீலம், செம்மஞ்சள்
(5) மஞ்சள், ஊதா, பச்சை (…….)

35. நாடகத்தில் 'பின்னோக்கு இசை' என்பதனால் கருதப்படுவது
(1) பின்புலச் சூழலைத் தெளிவுபடுத்தல்.
(2) நாடகத்தின் மனநிலையை அறிய வைத்தல்.
(3) நாடகத்தின் மோடியை வரையறுத்தல்.
(4) நாடகத்தின் முன், பின்னான சம்பவங்களை சேர்த்தல்.
(5) நாடகத்தின் கதையை விளங்க வைத்தல். (…….)

36.    

மேலே தரப்பட்ட அரங்குகள் வரலாற்று ஒழுங்கின் கட்டம்

(1) கிரேக்கம், எலிசபெத், மத்திய காலம், உரோம்
(2) உரோம், மத்திய காலம், கிரேக்கம், எலிசபெத்
(3) கிரேக்கம், உரோம், மத்திய காலம், எலிசபெத்
(4) உரோம், கிரேக்கம், மத்திய காலம், எலிசபெத்
(5) கிரேக்கம், உரோம், எலிசபெத், மத்திய காலம் (…….)



37.    

மேற்குறித்த நாடக ஆசிரியர்களின் நாடு.

(1) பிரேசில், ஜேர்மன், ரஷ்யா, நோர்வே
(2) ரஷ்யா, நோர்வே, பிரேசில், ஜேர்மன்
(3) நோர்வே, ஜேர்மன், பிரேசில், ரஷ்யா
(4) ரஷ்யா, நோர்வே, ஜேர்மன், பிரேசில்
(5) நோர்வே, ரஷ்யா, ஜேர்மன், பிரேசில் (…….)

38. மேலே காட்டப்பட்ட படங்களின் ஒழுங்கில் ஆசிரியர்களின் பெயர்கள்.

(1) பெற்தோல்பிறெக், அன்ரன்செக்கோ, இப்சன், ஒகஸ்தாபோல்
(2) அன்ரன் செக்கோ, இப்சன், பெற்தோல்பிறெக், ஒகஸ்தாபோல்
(3) இப்சன், ஒகஸ்தாபோல், அன்ரன் செக்கோ, பெற்தோல்பிறெக்
(4) அன்ரன் செக்கோ, இப்சன், ஒகஸ்தாபோல், பெற்தோல்பிறெக்
(5) ஒகஸ்தாபோல், அன்ரன் செக்கோ, பெற்தோல்பிறெக், இப்சன் (…….)

39.     

A B C D E

விதிக்கப்பட்ட நாடக பாடங்களில் ஈடிப்பஸ், கோடை, இராவணேசன், கிங்லியர், நாடக ஆசிரியர்களை குறித்த எழுத்து ஒழுங்கு முறையில்

1) C,A,D,E  2) B,C,D,A  3) E,C,A,D  4) A,B,C,E  5) C,A,E,D

(…….)

40. 

நாடகக்காட்சி அடங்கிய இப்பூச்சாடி ஓவியம் எந்த நாட்டுக்குரியது

1) கிரேக்கம்  2) உரோம்  3) சீனா
4) இத்தாலி  5) இந்தியா

(…….)

(40x1 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

- **உப பகுதி A இலிருந்து இரண்டு வினாக்களையும் உப பகுதி B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக**

### உப பகுதி A

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

1. i) கிங்லியர் நாடகத்தின் பிரதான மோதுகை யாது? *(3 புள்ளி)*
   ii) கிங்லியர் பாத்திரத்தின் செயல் நிலையே அப்பாத்திரத்தை அவல நிலைக்கு இட்டுச் செல்கிறது விளக்குக. *(6 புள்ளி)*
   iii) இந்நாடகத்தில் பொதுவான மனித உணர்வுகள் வெளிப்படும் விதத்தை விளக்குக. *(6 புள்ளி)*

2. சிறந்த அவலச்சுவை நாடகங்களில் ஈடிபஸ் தலைசிறந்த அவலச்சுவை நாடாகும்.
   i) கிரேக்கத்தின் அவலச் சுவை ஆசிரியர்களின் பெயரை மூப்பின் அடிப்படையில் குறிப்பிடுக. *(3 புள்ளி)*
   ii) அவர்கள் ஒவ்வொருவரும் அவலச் சுவையின் வளர்ச்சிக்கு ஏற்படுத்திய பங்களிப்பை சுருக்கமாக விளக்குக. *(6 புள்ளி)*
   iii) ஈடிபஸ் நாடகத்தில் விதி பெறும் இடத்தினைச் சுருக்கமாக விளக்குக. *(6 புள்ளி)*

3. i) கோடை நாடகத்தின் பிரதான முரணைக் கூறி அக்கால் ஏகாதி பத்திய ஆட்சிமுறை மக்களின் மனங்களில் ஏற்படுத்திய பாதிப்பினை சுருக்கமாக விளக்குக. *(7 புள்ளி)*
   ii) மாணிக்கம், செல்வம், சோமு ஆகிய பாத்திரங்களின் இயல்புகளையும் அவை மோதிக்கொள்ளும் சந்தர்ப்பங்களையும் நாடகப்பாட உதவியுடன் விளக்குக. *(8 புள்ளி)*

### உபபகுதி B

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக)**

4. ஈழத்தமிழரிடையே காணப்படும் கூத்துக்கள் பிரதேச நிலைப்பட்டது என்பர்.
   i) அப்பிரதேசங்களை பட்டியற்படுத்துக. *(3 புள்ளி)*
   ii) அவற்றிற்கிடையிலான ஒற்றுமைப்பண்பை சுருக்கமாக விளக்குக. *(6 புள்ளி)*
   iii) இப்பிரதேசக் கூத்து வடிவங்களின் இன்றைய நிலைமையை சுருக்கமாக விளக்குக. *(6 புள்ளி)*

5. மயில் முறை நாடக நிறுவனங்களை பட்டியலபடுத்தி அவற்றில் ஒன்று இலங்கையின் தமிழரங்க வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை விபரிக்குக. *(15 புள்ளி)*

6. பின்வருவனவற்றுள் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   1) வாசாப்பு
   2) மகுடி
   3) காமன் கூத்து
   4) பறைமேளக்கூத்து
   5) அர்ச்சுணன் தபசு *(3x5=15புள்ளிகள்)*